பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 வைகாசி 19 ஆண்டு 25 இதழ் 111
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 2 6 78

லாலா சோப்
பிரகாச சலவை! பளிச்சிடும் வெண்மை! ஈழம் எங்கும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை அச்சுவேலி

## மார்க்கோஸின் மனைவியும் ஒரு மந்திரி

மணிலா, ஜூன் 1

பிலிப்பைன்ஸ் நாட்டு ஜனாதிபதி மார்க்கோஸ் தமது 48 வயது மனைவியையும் அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மார்க்கோஸின் அமைச்சரவையில் 28வது அமைச்சராக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள திருமதி மார்க்கோஸ் ஏற்கனவே மணிலா நகர ஆளுநராகவும் பணிபுரிந்து வருகிறார்.

### வடபகுதியில் விவசாயத்துக்கு

# நிலத்துக்கடியிலுள்ள நீரையும் பயன்படுத்தத் திட்டம்

## பிரி. உதவியும் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் நிலத்துக்கடியிலுள்ள நீரைக்கொண்டும், மழைநீரைக் கொண்டும் மாறி மாறி விவசாயம் செய்வதற்கான திட்டம் ஒன்றை அரசு மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

பிரிட்டிஷ் அரசின் உதவியுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இத்திட்டத்துக்கமைய நிலத்துக்கடியிலிருந்து நீரைப் பெற்று நீர்ப்பாசனம் செய்யும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய பிரிட்டனிலிருந்து விசேட நிபுணர்கள் குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சின் பிரபல பொறியியலாளர் திரு ரூபேட்சன் தலைமையிலான 4 பேர் கொண்ட இக்குழு இப்போது [illegible] ஆலோசனைகளிலும் ஆராய்ச்சி வேலைகளை மேற்கொண்டு வருகிறது. [இ]

## ரூ. 10,000 பொருள் திருட்டு விசாரணையில் மூவர்

### யாழ். நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள "லோக்கல்ஸ்" நிறுவனக் கிளையில் இருந்து சுமார் 10,000 ரூபா பெறுமதிமிக்க அலங்காரக் கண்ணாடிப் பெட்டிகள் திருடப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக மூவரை பொலிசார் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

மேற்படி நிறுவனக் கிளை முகாமையாளர் திரு. ஏ. தெய்வரத்தினம் இச்சம்பவம் பற்றி நேற்று முன்தினம் பொலிஸில் புகார் செய்திருந்தார்.

இதுபற்றிய புலன் விசாரணை மேற்கொண்ட யாழ். பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் கருணாரத்ன, சார்ஜன்ட் தேசுதாசன், கான்ஸ்டபிள் ரி. அருச்சுனன் ஆகியோர் மூவரை விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

திருட்டுப் போனதாகக் கூறப்படும் பொருட்களில் தம்மால் மீட்கப்பட்டு விட்டதாக பொலிசார் தெரிவித்தனர். [உ]

## மருந்து மாறியதால் 3 குழந்தைகள் பலி

சென்னை, ஜூன் 1

சென்னையில் பெண் குழந்தைகள் ஆஸ்பத்திரியொன்றில் பயிற்சி தாதியொருவர்

[6-ம் பக்கம் பார்க்க]

### விமான நிலையத்தில்

## முருகன் புகழ்பாடிய சீர்காழி

### பெருஞ்சித்திரனாரும் நாடு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த தமிழக அறிஞர் புலவர் பெருஞ்சித்திரனாரும், 'இசைமணி' சீர்காழி எஸ். கோவிந்தராஜனும் நேற்றுக் காலை பலாலி விமான நிலையத்தில் இருந்து தமிழகம் பயணமானபோது அவர்களுக்கு பெருந்திரளான மக்கள் கூடிநின்று ஆனந்த ஆரவாரத்துடன் பிரியாவிடை அளித்தனர்.

விமான நிலையத்தில் ரசிகர்களின் அன்புப் பிடிப்பால் சிக்கித் திணறிப் போனார் சீர்காழி.

அவரைப்பாடுமாறு ரசிகர்கள் அன்புக்கட்டளையிட்டனர்.

தமது வெண்கலக் குரலில் கணீரென தமிழ்த் தெய்வம் முருகன் புகழ் பாடும் பாடல் ஒன்றினைப் பாடி ரசிகர்களை மெய்சிலிர்க்கச் செய்து பக்தி பரவசத்தில் ஆழ்த்தினார் அவர்.

"வெற்றிவேல் அது வீரவேல்" என்பதே அவர் பாடிய பக்திப் பாடலாகும். தாம் ஒரு முருக பக்தர் என்று கூறுவதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் கொள்வதாகக் கூறிய சீர்காழி எனவே தான் தமது இஷ்ட தெய்வத்தின் புகழ் பாடும் பாடல் பாடியதாக விளக்கமளித்தார். விமான நிலையத்தில் உணர்வாதரவு கூட்டணி எம்.பி. பண்டிதர்கா. பொ. இரத்தினம், திரு. எஸ். ஜெயநாதன், கோவை மகேசன் ஆகியோரும் புலவரையும் இசைமணியையும் வழியனுப்ப வந்தவர்களுள் காணப்பட்டனர். [கூ]

# ஒருநாள் சிசு கடத்தல் ஆஸ்பத்திரியில் பரபரப்பு!

[யாழ்ப்பாணம்]

தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் பகல் நேரத்தில் தொட்டிலில் நித்திரையாகிக் கொண்டிருந்த ஒரு நாள் குழந்தை ஒன்று திடீரென மறைந்து விட்டதால் ஆஸ்பத்திரியில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. இச் சிசு கடத்தப்பட்டிருக்கலாமென்று அஞ்சப்படுகிறது.

யாழ். பொலிஸ்நிலைய சிறு குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. க. திருச்சிற்றம்பலம் இச் சம்பவம் பற்றி விசாரணை நடத்தி வருகின்றார்.

இளவாலையை சேர்ந்த பிரவுன்மின் அம்மா. பிரசவத்திற்காக ஐயனார் கோவில் வீதியிலிருக்கும் தனியார் மருத்துவமனையில் கடந்த மாதம் 30ம் திகதி மாலை அனுமதிக்கப்பட்டதாகவும் அன்றிரவு 11-55 மணிக்கு ஒரு பெண் குழந்தையைப் பிரசவித்ததாகவும் கூறப்படுகிறது. ஒருநாள் பிற்பகல் 2 மணியளவில் தயார் குழந்தைக்கு தண்ணீர் பருக்கி தொட்டிலில் நித்திரையாக்கி விட்டு தானும் நித்திரைக்குச் சென்றதாகவும் பின் 3 மணியளவில் நித்திரை விட்டு எழுந்தபோது தொட்டிலில் குழந்தையை காணவில்லை என்றும் கூறப்படுகிறது.

ஆஸ்பத்திரியில் பொலிசார் நடத்திய விசாரணையின் போது குழந்தை மாயமாக மறைந்து விட்டதாக தெரிய வந்துள்ளது. இன்னும் குழந்தையைக் கண்டு பிடிக்கவில்லை. [ஏ]

காலம் பொன்னானது.....!
உங்கள் கடமைகளை காலந்தவறாது செய்ய உதவ....
இதோ இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.... உலகப் புகழ்பெற்ற
OMEX ஓமெக்ஸ் CAMY கெமி
CITIZEN சிற்றிசன் SEIKO சீக்கோ
★ கைக்கடிகாரங்கள் ★ சுவர்மணிக்கூடுகள்
★ அலராம் மணிக்கூடுகள்
பலரகமான, பலதரமான வகைகளில் தெரிவுசெய்ய நாடுங்கள்
சி. சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் — போன்: 284

## ஆழ்கடலுக்குச் சென்ற இருமீனவர் என்னவாயினர்?

### பருத்தித்துறையில் பரபரப்பு

(பருத்தித்துறை)

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்களையும் அவர்கள் சென்ற இயந்திரப் படகையும் காணவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

திருநாமம், உதயகுமார் என்ற இம் மீனவர்களைத் தேடிக்கண்டு பிடிக்கும் முயற்சி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 9ம் திகதி இவர்கள் ஆழ்கடலுக்குச் சென்றனராம்.

# அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற வல்வெட்டித்துறை மார்க்கண்டு கணேஷ் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மார்க்கண்டு கணேஷ் காலமெய்தியவர்

கணேஷ் கைம்பெண் வள்ளிக்கொடி மறுநாமம் இராசேஸ்வரி

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல: T 1046

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு ஆடி மாதம் 14-ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

நீதிமன்றின் கட்டளைப்படி

**இ. விஸ்வலிங்கம்,**
பதிவாளர்.

1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 15-ம் நாளளவில் இன்று திகதியிடப்பட்டுள்ளது.
த. யோகசிகாமணி எல்.எல்.பி
சட்டத்தரணி,
தொண்டமானாறு. 9419

---

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கொக்குவில், கொக்குவில் மேற்கு கந்தையா செல்லத்துரையின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்கள் சம்பந்தமாக காலஞ்சென்றவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. T/3366

செல்லத்துரை தவயோகராசா தேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
விண்ணப்பதாரி

எதிராக

கந்தையா செல்லத்துரை கைம்பெண் புனிதவதி தேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்,
பிரதிவாதி

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7ஆந் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக்காக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
(ஒப்பம்)

**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்

1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

**பொ. நவரத்தினம்**
விண்ணப்பதாரியின்
சட்டத்தரணி
9427

---

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

---

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் 362, நாவலர் வீதி, "குணவாசா", சாள்ஸ் குணநாயகம் சற்குணரத்தினம்

மரணமெய்தியவர்

யாழ்ப்பாணம் 362, நாவலர் வீதி, சொலமன் திருத்துவதுமேக்

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் வழக்கு இல. 422/3346 T

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1978-ம் ஆண்டு ஆனி மாதம் 16-ந் திகதி முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுறுதியாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 18-ந் திகதி,

நீதிமன்றக் கட்டளைப்படி
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.

**பி. செ. இராசக்கோன்,**
சட்டத்தரணி,
தயாரித்தவர். 9443

---

## நிர்வாகிகள்

[கன்னார்]

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் மன்னார்க்கிளையின் பொதுக்கூட்டம் மன்னார் கச்சேரியில் இணைத்தலைவர் திரு. செ. துரைலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாக திரு. செ. துரைலிங்கம் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக திரு. மேரி ஜோசேப்பும், பொருளாளராக பீதாம்பரமும், செயற்குழு உறுப்பினர்களாகப் பத்துப்பேர்கள் மன்னாரிலுள்ள சகல காரியாலயங்களிலுமிருந்து தெரிவு செய்யப்பட்டனர். இறுதியில் தேநீர் விருந்துபசாரம் நடைபெற்றது. [அரியாலை நி-உ]

---

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதி, 32-ம் இலக்கத்தில் வசித்து தற்போது காலஞ்சென்ற நாராயணபிள்ளை கோபாலகிருஷ்ணன் என்பவரின் மரணசாதனம் எழுதப்படாத மரணச் சொத்துக்கள் சம்பந்தமான விடயத்தில்

கோபாலகிருஷ்ணன் கைம்பெண் கமலாட்சி இல. 32, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் வழக்கு இல. T/3368

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு ஆனி மாதம் 9-ந் திகதி முற்பகல் 10 00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுறுதியாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 30-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்.

வரைந்தது:
**ம. ஆ. யேசுதாசன்**
மனுதாரின் சட்டத்தரணி,
73, பாஷையூர் வீதி,
யாழ்ப்பாணம். 9456

---

## மாதனிக்கு முதலிடம்

[யாழ்ப்பாணம்]

கச்சாய் அரசினர் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். முருகவேள் பரிசில்களை வழங்கினார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். முன்னாள் ஆசிரியர் திரு. வ. கந்தையா மங்கல விளக்கேற்றிவைத்தார். அதிபர் திரு. ஏ. தருமலிங்கம் தலைமையில் போட்டி நடைபெற்றது.

மாதவி இல்லம் முதலாமிடத்தையும், கண்ணகி இல்லம் இரண்டாமிடத்தையும், மணிமேகலை இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றன. [கஞ]

---

## காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை போசனசாலை

# (தாணுகவொழித்தல்)

தாணுகவொழிக்க முன்வந்திருக்கும் மேலே குறிப்பிட்ட போசனசாலை சம்பந்தப்பட்ட கடன்காரர்கள் மேற்படி நோக்கத்துக்காக ஒழிப்போனால் நியமிக்கப்பட்ட திகதியாகிய 1978-06-15-ந் திகதிக்கு முன் தங்களின் பெயர், விலாசம், கடன்கள் பற்றிய விபரங்கள் ஆகியவற்றை ஒழிப்போனாகிய காங்கேசன்துறை, காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை, உள்ளகக் கணக்குப் பரிசோதகர் திரு. ஏ. ஈ. சாதுசிகாமணிப்பிள்ளை அவர்களுக்கு தேவைப்பட்டால் ஒழிப்போரிடமிருந்து எழுத்து மூலமான அறிவித்தலின் பேரில் வந்து தமது கடன்களை அல்லது உரிமை கோரல்களை நிரூபிக்குமாறு கோரப்படுகின்றார்கள்; 1978-06-15-ந் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் சகல உரிமைக்கோரல்களும் காலாவதியானவையெனக் கணிக்கப்படும்.

தாணுகவொழிப்போன்
**ஏ. ஈ. சாதுசிகாமணிப்பிள்ளை.**

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை,
1978-05-29. 9441

---

# வரி விளம்பரம்

## தேவை

திறமையுள்ள சமையல்காரர் உடன் தேவை. விபரங்களுக்கு: குமாரன் டூரிஸ்ட் இன், 67, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 7753. 9448

ஞானம்ஸ் ஸ்ருடியோ ஸ்தாபனத்தார் திருமணமாகாத ஆண், பெண் இருபாலாரிடமிருந்து லிகிதர்/வரவேற்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோருகின்றனர். விண்ணப்பதாரர் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக்கூடியவரும், ஆங்கிலம், தட்டெழுத்து ஆகியவற்றில் திறமையும் பிணைப்பணம் கட்டக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். யாழ். மாநகர சபை எல்லையினுள் வசிப்பவருக்கு முதலிடம் வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி: 10-6-78.
9449

கிளிநொச்சி விவசாயப் பாடசாலைக்கு ஓர் சமையல்காரர் தேவை. மாதம் 150 ரூபாவும் உணவும் தங்குமிடவசதியும் செய்து கொடுக்கப்படும். மேலும் விபரங்கட்கு: "மாணவர் தலைவர்", விவசாயப் பாடசாலை, கிளிநொச்சி.
9442

## விற்பனைக்கு

கொடிகாமம் நெற்பேலியில் இராசா தோட்டத்துக்குப் பக்கத்தில் 12½ ஏக்கர் தென்னங்காணி விற்பனைக்கிருக்கிறது. கெற்பேலி அரசினர் பாடசாலைக்குப் பக்கத்தால் தெற்கே திரும்பும் கல்ரோட்டில் ஒரு மைல் தூரம் வந்து காணியைப் பார்வையிடலாம். தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: வேலுப்பிள்ளை கணேசு, பாலாவி தெற்கு, கொடிகாமம். 9447

இறக்குமதி செய்யப்பட்ட நைலோன் மீன்வலைகள் குறலோன்ரேப்புகள், குறலோன் முடிவன்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். H. இஸ்மாயில்ஜி அன்கோ, 71, 73 கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 9455

சோனி TC 530ஸ்ரீறியோ, ரேப்றிகோடர் 4 ரக் (Track) 3 ஸ்பீட் (Speed) 4ஸ்ப்பீக்கர், 2 மைக் 59 (101) கோவில் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 9451

பேஜோ (PEUGEOT) 504-1970 மொடல் மெருன் கலர் குளிர் சாதனம் பூட்டப்பட்டுள்ளது. ரேடியோ கசெட் உள்ளது. தொடர்பு கொள்ளவும். திருமதி வெசன்சரம், அரசடி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி (நெல்லியடி.) 9445

## பயிற்சி

3 மாத விசேட மின்னியல் டிப்ளோமாப்பயிற்சி 19-6-78ல் ஆரம்பமாகவுள்ளது. சிறந்த முறையில் செய்முறைப்பயிற்சி வழங்கப்படும். பயிற்சியில் சேர்ந்து வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதோடு நீங்கள் பல வழிகளில் நிச்சயமாக பயனடைவீர்கள் என்பதை நாம் உறுதிப்படுத்துகிறோம். அதிபர், இன்ஸ்ரிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11/B மொம்சாக் பில்டிங், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9457

## தவறிவிட்டது

31-5-78 யாழ்ப்பாணம் K. K. S. வீதியில் (சின்னத்துரை பிறதர்ஸ்) முன்பாக Developed Film Roll ஒன்று தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் ஈழநாடு சஞ்சிகாலத்திடம் ஒப்படைத்தால் உதவியாக இருக்கும். 9450

## வகுப்புகள்

G. C. E. A/L வகுப்புக்கள், A/L ஆவணி 79 நடைபெறுகின்றன. A/L Repeat (April 79) அடுத்தவாரம் ஆரம்பம். ● தாவரவியல் செல்வி ராஜரட்ணம், நேரம் 2-45 p. m. சனி, 6-30 a. m. ஞாயிறு, கில்னர் அகடமி - யாழ்ப்பாணம். 9436

## CLASSES

I. C. M. A. (A & B) Chartered Preliminary commencing 3-6-78, 1-30 p m. Jaffna Education Centre-22, Ramiah Chettiyar Lane, Jaffna. 9440

## முதலாவது நினைவாஞ்சலி



**க. கந்தையா**
பிறப்பு: 1921
இறப்பு: 1-5-77

சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு சக்திவேல் தொழிற்சாலை உரிமையாளர். அன்பே உருவான எங்கள் அன்புத் தெய்வமே எம்முடன் வாழ்ந்ததையெல்லாம் ஒரு பொற்கனவாக்கிவிட்டு எம்மை ஆழாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டுவிட்டீர்கள். நீங்கள் தந்த வாழ்வை நீங்கள் காட்டிய வழியில் நிறைவு செய்வோம். அன்பரே என்றென்றைக்கும் எமக்கு வழிகாட்டுவீர்களாக. உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தாயார்: சொர்ணம்மா, சகோதரன்: உருத்திரலிங்கம், மனைவி: தங்கரத்தினம், பிள்ளைகள். 9452

## இன்று நடக்கும் இல்லப் போட்டி

[புலோலி]

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று மேற்படி பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. நா. துரைச்சாமி தலைமையில் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினர்களாக பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதி எம். பி.க்கள் கலந்துகொள்கிறார்கள். [அ]

## உதைபந்தாட்டம்

(நெல்லியடி)

கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட தெரிவுக் குழுவும் பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட தெரிவுக் கோஷ்டியும் எதிர் வரும் 4-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய. மகா வித்தியாலய விளையாட்டரங்கில் மோதவுள்ளன. இப்போட்டியின் போது பிரதம விருந்தினராக சட்டத்தரணி அன்ரன் முத்துக்குமார் கலந்து கொள்வார்.

ஈழநாடு
The Eelanaadu

## ஜனாதிபதியின் பத்துக் கட்டளைகள்

சிறுபான்மையினருக்கு அதிலும் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களுக்கு இந்நாட்டில் சமத்துவமும் சமநீதியும் கிடைக்கச்செய்வது உட்பட இந்நாட்டின் சாதாரண குடிமக்களின்மேம்பாட்டுக்காகத் தாம் தமது பதவிக்காலத்தில் பத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்புவதாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பட்டமளிப்பு உரை நிகழ்த்துகையில் அறிவித்திருக்கிறார்.

பத்து நடவடிக்கைகள் என்று சொல்வதற்குப் பதிலாக "பத்துக் கட்டளைகள்" என்றும் சொல்லலாம்.

1. பாராளுமன்ற ஆட்சி முறையை நிலைக்கச்செய்வது.

2. ஜனாதிபதியின் ஆட்கள் என்ற ஒரு கூட்டம் உருவாகாமல் பார்த்துக் கொள்வது.

3. பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்டங்களையும் அதன் முடிவுகளையும் பாரபட்சமின்றி அரசியல், கட்சி நலன், குடும்ப நலன் பாராமல் அமுல் நடத்துவது.

4. அரசியல் பழிவாங்கலுக்கு இடமளிக்காது விடுவது.

5. நாட்டின் சகல பிரஜைகளையும் சமத்துவமாக நடத்தி அவர்களின் முன்னேற்றத்திற்குச் சம வாய்ப்பு அளிப்பது.

6. சிறுபான்மையினருக்கு குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களுக்கு வாழ்வின் சகல துறைகளிலும் சமத்துவம், சமநீதி கிடைக்கச் செய்வது. இந்த விஷயத்தில் சாதி, சமய வேற்றுமை பாராமல் புனித புத்தரின் போதனைப்படி நடந்து கொள்வது.

7. பேச்சிலும் செயலிலும் அகிம்சையைக் கடைப்பிடிப்பது.

8. அமைச்சர்களுக்கு மந்திரி சபை உறுப்பினர்களுக்கு என வகுக்கப்பட்டுள்ள ஒழுக்க விதிகளின்படி வாழ்வது. கட்சியின் ஏனைய எம். பி.க்களையும் அப்படியே வாழச்செய்வது.

9. ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பது.

10. ஒவ்வொரு நடவடிக்கையின்போதும் அது இந்நாட்டு ஏழை எளிய ஜனங்களின் மேம்பாட்டுக்கு எந்த வகையில் உதவுமென்று சிந்திப்பது.

இவைகள் தான் ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ள 'பத்துக் கட்டளைகள்'.

பிரதமராகப் பதவியேற்றதும் எம். பி.க்களுக்கு ஒழுக்க நெறிக் கோவை யொன்றைத் தயாரித்து வெளியிட்டார்.

ஜனாதிபதி திரு. ஜயவர்த்தனாவைப் பொறுத்தவரையில் அவர் வெளியிடும் கருத்துக்களும் ஆலோசனைகளும் மிகச் சிறந்தவையாக இருக்கின்றன.

இவற்றை இந்த நாட்டிலுள்ள சகல அரசியல்வாதிகளும்; சகல அதிகாரிகளும் செயல்படுத்தி வாழ்ந்தால் உண்மையாகவே இங்கு தார்மீக அரசு ஏற்படுவதுடன் ஆசியாவின் சுவிட்சர்லாந்தாகவும் இலங்கை விளங்கும்.

முதலில் ஜனாதிபதியின் இலட்சியங்களை அவரது அமைச்சர்களும், ஆளும் கட்சி எம். பி.க்களும் செயல்படுத்தி வழிகாட்டினால் மற்றவர்களும் தானாகவே இவற்றைப் பின்பற்ற முன்வருவரென்று எதிர் பார்க்கலாம்.

# "ஒருமொழி சிதைவுறுமானால் அந்த இனமே சிதைந்து போகும்"

## யாழ்நகரில் பெருஞ்சித்திரனார் பேச்சு

(யாழ்ப்பாணம்)

"ஒவ்வொரு இனத்திற்கும் தாய்மொழி அவசியமானது. தாய்மொழி சிதைவுபெறும் போது அந்த இனமும் சிதைக்கப்படுகின்றது. இதற்காகவே நாம் தாய்மொழியைப்பேணிக் காக்க வேண்டியவர்களாயுள்ளோம்"

தமிழகப் புலவரேறு "தென்மொழி" ஆசிரியர் பெருஞ்சித்திரனார் மேற்கண்டவாறு கூறினார். நேற்றுமுன்தினம் யாழ் மத்தியகல்லூரி மண்டபத்தில் பெருஞ்சித்திரனார் உரையாற்றினார் - ஊர்காவற்றுறை எம்.பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் 'தமிழின வரலாற்று வீழ்ச்சி' என்னும் பொருள்பற்றிப் புலவர் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:

"தமிழ்மொழிமிகப்பழமையான, தொன்மையானமொழி அத்தகைய மொழியின் சிறப்பை உணராமல் வேற்றுமொழியைப் படித்ததனால் தான் தமிழன் தன்தாய்மொழியின் தனித்துவத்தை இழந்துவிட்டான். அதனால் தான் மொழியிழந்து, நாடிழந்து, அடிமைபோல் வாழ்கின்றான்.

இன்று பதினெட்டு உலக நாடுகளில் தமிழர்கள் தம்மைத் தெரிந்துகொண்டு வாழ்ந்துவருகிறார்கள். இன்னும் இருபது நாடுகளில் தாம் தமிழர்கள் என்று தெரியாமலே தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

### 50 ஆயிரம் ஆண்டுப் பழமை

'நாம் பேசுகின்ற தாய்மொழியாம் தமிழ்மொழி ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றியது. இதை இன்று பலர் ஏற்க மறுக்கலாம். ஆனால் மொழியியல் வல்லுநர்களும் வரலாற்று ஆசிரியர்களும் இதை ஏற்றுக்கொள்வார்கள்.

'இஸ்ரேலியர்கள் சிதைந்து போன தமது ஹிப்ருமொழிச் சொற்களைவைத்து தமதுபழமைச் சிறப்பை உணர்ந்து தமக்கு ஒரு நிலம்வேண்டும் என்ற உணர்வைப் பெற்றார்கள். உலகெங்கும் பரந்திருந்த இஸ்ரேலியர்களை இணைத்து ஹிப்ருமொழிக்குப் புத்துயிர் அளித்து அதைக் காத்துக்கொண்டதன் மூலம் தமது நிலத்தையும் மீட்டுக்கொண்டார்கள். தமக்குக் கிடைத்த அந்தப் பாலைவனப் பகுதியைச் சோலைவனமாக்கினார்கள். தமக்கெனத் தனியரசை அமைத்துக்கொண்டதன்மூலம் ஹிப்ருமொழிஇன்று அரசமொழியாகத் திகழ்கின்றது.

### தமிழர்கள்...

ஆனால் தமிழர்கள் இன்னும் தமக்குள் பல பிளவுகளை-பிரிவுகளை ஏற்படுத்தி தம்மையும் தாய்மொழியையும் இழந்து இன்று அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்." (கா-அ)

# "மொழியைப் பேணுவதாலேயே இனத்தைக் காக்க முடியும்" — அமிர்

(யாழ்ப்பாணம்)

'தமிழினமும், தமிழ் மண்ணும் காக்கப்படவேண்டுமென்றால் தமிழ்மொழி காக்கப்படுவது அவசியம். தமிழ் மொழியைக் காப்பது தமிழ் இளைஞர்களது கடமை"

இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

அவர் தொடர்ந்து தமது உரையில், 'எத்தனையோ நாகரீகங்களுக்கும், எத்தனையோ மொழிகளின் தாக்கங்களுக்கும் மத்தியில் தனியாகநின்று நிலைக்கின்ற பெருமை தமிழுக்குத் தானுண்டு. மறைமலையடிகளார் போன்ற தமிழ்அறிஞர்களால் நடாத்தப்பட்ட 'தனித்தமிழ் இயக்கம்' இன்றும் இந்தியாவில் இருந்து ஆற்றுகின்ற அளப்பரிய பணியை தமிழ்கூறும் நல்லுலகம் இன்று நன்றிப்பெருக்கோடு உணர்ந்து பாராட்டுகிறது. இத்தகைய அருப்பணியில் தன்னை ஈடுபடுத்தித் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றி வரும் திரு. பெருஞ்சித்திரனார் பாராட்டப்பட வேண்டியவர். இத்தகைய பெரியார்களதும், தமிழ்ப் புலவர்களதும் நற்பணியில்லையென்றால் தமிழ் இன்று என்னாகியிருக்குமோ என்று எண்ணவேண்டியுள்ளது.

சிலர் தனித்தமிழ் இயக்கம் அவசியமா எனக்கேட்கலாம். ஒருமொழியின் தனித்துவம் காக்கப்பட்டால்தான் அந்த இனத்தின் தனித்துவம் காக்கப்படும்." (கா-உ)

# "முருகன்புகழ்பாடி பெருவாழ்வு பெறுவோம்"

(சங்கானை)

"சூரபத்மனுடைய பெருந்தவத்தின் பயனே அவன் முருகப் பெருமானின் காட்சியை நேரில் காணக்கிடைத்தது. சகோதரர்கள் முருகனுடன் யுத்தம் செய்யவேண்டாமென தடுத்தும் சூரனுடைய ஆணவம் அவனை விடவில்லை."

இவ்வாறு வித்துவான் இ. ஆறுமுகம் சங்கானை வெல்லில் முருகமூர்த்திகோவில் வருடாந்த உற்சவத்தில் "மூவர்கண்ட முருகன்" என்னும் பொருள் பற்றி உரையாற்றுகையில் கூறினார்.

மேலும் அவர் சொன்னதாவது: "நல்வினைப்பயன்காரணமாக தெய்வீக நிலையிலும் தன் மானத்தை நினைந்து மீண்டும் முருகப்பெருமானுடன் மோதி ஈற்றில் ஆணவம் அடங்கிமுருகனின் அருளால் சேவலும் மயிலுமாக அவர் திருவடி அடைந்தான்.

நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என வாதாடியநக்கீரனுக்குக் காட்சி கொடுத்து திருமுருகாற்றுப் படையையும் எமக்களித்தார்

இறப்பராவத்திலிருந்து தவறான பாதையில்சென்றஅருணகிரிநாதரையும் மரணத்தறுவாயில் தடுத்தாட்கொண்டு அவர் மூலம் எமக்குத் திருப்புகழையும் தந்தார்.

சூரன் போர்க்களத்திலும், நக்கீரன் மரணத்தறுவாயிலும் அருணகிரிநாதர் தற்கொலையிலும் முருகப்பெருமானைக்கண்டார். எனவே எமது சமுதாயம் இறைவனைக்கண்டசமுதாயமாகும். நாமும் தினமும் முருகன் நாமத்தை உச்சரித்தும் பாடியும் அவன் அருள் பெறுவோமாக." (உ)

## "பிள்ளைகளுக்கும் இலவசபயணச் சீட்டுவேண்டும்"

(உடுப்பிட்டி)

"ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களுக்கும் கணவனுக்கும், மனைவிக்கும் மட்டும் வருடாந்தம் வழங்கப்படும் ஒருசோடி இலவசப் பயணச் சீட்டு அவர் சேவையிலிருக்கும்போது வழங்கப்பட்டதுபோல் அவரது பிள்ளைகளுக்கும் வழங்கப்படல்வேண்டும்."

மேற்கண்டவாறு அரசாங்கத்தைக் கோருவதென்று இலங்கை அரசினர் ஓய்வூதியம் பெறுவோர் சங்க வடமராட்சிக் கிளை முடிவுசெய்துள்ளது.

தேசிய ஓய்வூதியம் பெறுவோர் சங்க சம்மேளனத்தின் மூலமாக இக்கோரிக்கை அரசிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

"அரசாங்கசேவையிலிருந்து இளைப்பாறி ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கப்படும் பஞ்சப்படியை அரசாங்க சேவையிலுள்ள சகல ஊழியர்களுக்கும் கணிக்கப்படுவது போல் கணித்து வழங்கவேண்டும்" என்று அரசாங்கத்திடம் வேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (உ)

## தமிழ்த்தொண்டர் ஆறுமுகம்

நாற்பத்தொரு வருடங்கள் ஆசிரியசேவை—அதிலும் தமிழும் சைவமும் போதனை, இதைப் பெரிய சாதனை என்று சொல்வதா, அவர் அனுபவித்த வேதனை என்பதா, ஒருவரின் மொத்தான தியாகம் என்பதா அல்லது கல்வித்துறைக்குப் புரிந்த சீரிய சேவை என்பதா? பாடசாலைக்கு உள்ளேயென்று மட்டுமல்லாமல் வெளியேயும் வானொலியிலும் இலக்கிய, சமயச் சொற்பொழிவுகளும், சைவநற்சிந்தனைகளும் கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், விவாதஅரங்குகள், வழக்காடு மன்றங்கள், கவியரங்குகள் ஆகியவற்றில் முழக்கமும் அடுக்காகச் செய்துவந்திருக்கிறார் என்றால் அப்படிப்பட்டவர் நாட்டின் பொக்கிஷமல்லவா? அவர்தான் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலிருந்து கடந்தமாதத்துடன் ஓய்வுபெறும் வித்துவான் இ. ஆறுமுகம்.

அவருடைய ஆரம்பம் சிறியது தான். ஆனால் விடாமுயற்சியும் ஆர்வமும் படிப்படியாக முன்னேறச் செய்தன புகழ்வாழ்வின் உச்சிக்கு உயர்த்தி வைத்தன. கோப்பாய் ஆசிரிய கல்லூரியில் பயிற்சி, ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க பால பண்டிதர் பரீட்சையில் சித்தி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் இறுதித் தேர்வில் முதற்பிரிவில் முதலிடமும் பரிசிலும், தினகரன் ஆசிரிய குழுவில் பணி, ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரிய சேவை—இவை இவர் வளர்ந்த பாதை, பலரை வளர்த்த தொண்டு நெறி இவற்றுக்கு முத்தாய்ப்பு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஆற்றிய சேவை.

இவற்றைவிட கலைமதி சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். அலங்கார பாடு, ஆலயத் தொண்டு தேவார திருவாசக பாராயணம், இலக்கிய ஆராய்ச்சி, திருக்குறள் விளக்கம் இவருடைய உள்ளத்தை ஈர்ப்பவை இவருடைய கனிவான பேச்சும் அமைதியான தோற்றமும் அடக்கமான வாழ்வும் ஒழுக்க சீலமும் எவரையும் கவர்பவை. இவருடைய பழைய மாணவர்களின்-அவர் எத்துறையில் எத்துணை உயர் பதவியிலிருந்தாலும் - நெஞ்சத்தில் அசையாத இடம் பெற்றவர்.

எதையும் சுவைத்து ரசிக்கும் நெகிழ்வுள்ளம் படைத்த இவரால் ஓய்வுகால வாழ்க்கையையும் பயனுள்ளதாகவும் சுவாரஸ்யமாகவும் ஆக்கி தமிழுக்கும் சைவத்துக்கும் தொடர்ந்து ஏற்றம் தர முடியும். வயதில் முதிர்ந்து விட்டாலும் சிந்தனையில் இளைஞரான இவர் நீண்டகாலம் வாழவேண்டுமென்று இவருடைய பல்லாயிரக் கணக்கான பழைய மாணவர்கள், நண்பர்கள், ரசிகர்கள் இன்று வாழ்த்துகிறார்கள்.

ஆறுமுகத்தக்கு பன்னிருகையனின் திருவருள் என்றும் பாலிப்பதாகுக.

- மானிப்பாய் மரியதாஸ்

## 'நால்வர் காட்டும்வழி'

(சங்கானை)

"பல்லவர் அரசோச்சிய காலத்தில் சமணர்களாலும் பௌத்தர்களாலும் சைவத்திற்கு ஏற்பட்ட இன்னலிலிருந்து விடுவித்தவர்கள் எமது சமய குரவர் நால்வராவார். அவர்கள் தமிழுக்கும் சைவத்திற்கும் காட்டிய வழியை நாமும் பின்பற்ற வேண்டும். நாம் பிறப்பெடுத்ததன் பயன் பெற ஆலய வழிபாடே சிறந்த வழியாகும்".

இவ்வாறு திருமதி பத்மசுந்தரி சிவகுருநாதன் சங்கானை முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவத்தில் "நால்வர் காட்டும்வழி" என்னும் பொருள்பற்றி உரையாற்றுகையில் கூறினார். (உ)

## மணிவாக்கு

மேடும் பள்ளமுமாக வாழ்க்கை மாறி மாறி வந்தால் உனக்கு பெரிய வீழ்ச்சி யில்லை. ஒரேயடியாக உச்சிக்கு நீ போய் விட்டால் அடுத்து பயங்கரமான சரிவு காத்திருக்கிறது.

—கவியரசு கண்ணதாசன்

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ்

# 326 குடும்பங்களுக்கு நீலகிரி தோட்டத்தில் வேலைவாய்ப்பு

## தமிழக அரசு ஏற்பாடு

சென்னை, ஜூன். 1

**சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தாயகம் திரும்பும் இந்தியப் பிரஜைகளில் 326 குடும்பங்களுக்கு நீலகிரி மாவட்டத்தில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலை வாய்ப்பளிக்கப் படவுள்ளது.**

இதற்கான விசேடதிட்டம் ஒன்றை தமிழக அரசு தீட்டியுள்ளதென்று தமிழ்நாடு சமூக நல அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்தியா திரும்பிய 426 குடும்பங்களுக்கு தமிழ்நாட்டில் நிரந்தரவேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்றும் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தொடர்ந்து தாயகம் திரும்பும் இந்தியப் பிரஜைகளை தமிழ்நாட்டில் மட்டுமல்லாது கேரளம், ஆந்திரா, கர்நாடகம் ஆகிய அண்டை மாநிலங்களிலும் குடியமர்த்தி வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டமொன்றைத் தமிழ்நாடு அரசு தீர்மானித்துள்ளதாகவும் செல்வி சரஸ்வதி தெரிவித்தார்.

ஏற்கனவே நாடு திரும்பியவர்களுக்கு வழங்கப்பட்ட வியாபாரக் கடன்களை அவர்கள் சரியாகப் பயன்படுத்தப்படாமல் வீணாக்கியுள்ளனர் என்றும் இனிமேல் வியாபாரக்கடனுக்குப் பதிலாக வேலைவாய்ப்புக்களை அளிக்க தமிழக அரசு தீர்மானித்துள்ளது என்றும் செல்வி சரஸ்வதி கூறினார். (இ)

## 25,000 டாலர் பெறுமதி போதைவஸ்து கடத்தல்!

(கொழும்பு)

25 ஆயிரம் அமெரிக்க டாலர் பெறுமதியான போதைவஸ்தைக் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் பிரிட்டிஷ் பிரஜை ஒருவரை பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் விசாரணைகளை மேற்கொண்டும் பொருட்டு நேற்று கட்டுநாயகா விமானநிலையம் ஊடாக கனடாவுக்குச் செல்ல இருந்த கனடியப் பிரஜை ஒருவரின் பிரயாணத்தையும் பொலிசார் தடைசெய்தனர்.

இக் கடத்தல் தொடர்பாக மேலும் ஒரு பிரிட்டிஷ்காரரையும் இரண்டு பாகிஸ்தான்காரர்களையும் பொலிசார் தேடிவருகின்றனர்.

இக் கடத்தல்காரர்களுக்கு பிரிட்டனில் வசிக்கும் இலங்கைப் பிரஜை ஒருவரே இலங்கையில் தொடர்பை ஏற்படுத்திக்கொடுத்துள்ளனர் என்று பொலிசார் சந்தேகிக்கின்றனர். (இ)

## உதவி நன்கொடை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பட்டண சபைப்பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்கு 1977ம் ஆண்டிற்கான உதவி நன்கொடைப்பணம் பட்டணசபை விசேஷ ஆணையாளரினால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

கிராமிய வங்கி யாஸ்புத்தகத்தில் இந்த உதவி நன்கொடைப்பணம் போடப்பட்டு சனசமூக நிலையங்களிடம் வழங்கப்படுகிறது. (கு)

## சட்டத்தரணி

(சரவணை)

இலங்கைத்தமிழாசிரியர் சங்கக்காரியதரிசியான திரு. என். பாலசுப்பிரமணியம் அண்மையில் உயர்தர நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார். (உ)

சீர்காழி கோவிந்தராஜனுக்கு

## 'இசைத்தென்றல்' பட்டமும் பொன்னாடை கௌரவமும்

(நெல்லியடி)

வரணி சுட்டிபுரம் அம்பாள் ஆலயத்தில் இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சீர்காழி கோவிந்தராஜனுக்கு 'இசைத் தென்றல்' என்ற பட்டம் சூட்டப்பட்டு பொன்னாடையும் போர்த்தப்பட்டது. திரும்பூர் குடி வி.வி.கே. ஆறுமுகம் தனது சார்பில் வேறொரு பொன்னாடையைப் போர்த்தினார்.

கடந்த 30ந் திகதி இரவு சீர்காழி கோவிந்தராஜனுக்கு பருத்தித்துறை "உண்மை வெல்லும் இயக்கம்" தேநீர் விருந்துபசாரம் அளித்துக் கௌரவித்தது. திரு. மு. பொ. வீரபாகு தலைமையில் பருத்தித்துறை பஸ்நிலையத்தில் அமைந்துள்ள வீரபாகு கட்டடத்தில் இவ்வரவேற்பு இடம்பெற்றது. (உ)

இந்திரா — உத்தியோகபூர்வ

# காங்கிரஸ் இணைவதில் திருமதி காந்திக்கு அக்கறையில்லை

## சவான் கருத்து

புதுடில்லி, ஜூன். 1

முன்னாள் இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு இந்திரா காங்கிரஸும் உத்தியோகபூர்வ காங்கிரஸும் இணையவேண்டுமென்பதில் அக்கறையில்லை. உத்தியோகபூர்வ காங்கிரஸில் மேலும்பிளவுபட வேண்டுமென்பதே அவரது நோக்கமாகும்.

இவ்வாறு இந்திய லோக சபையின் எதிர்க்கட்சித்தலைவர் திரு. வை. பி. சவான் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ காங்கிரஸ் வலுவான தொரு எதிர்க்கட்சியாக உருவாகும் நேரம் வந்துவிட்டது. எனவே இணைப்பு எண்ணங்களை விடுத்து கட்சியை வலுவாக்கும் பணிகளில் கட்சி உறுப்பினர்கள் ஈடுபடவேண்டும் என்றும் திரு. சவான் தெரிவித்தார்.

### இணைப்பு குறித்து ஜூன் 6ல் ஆராய்வர்

இதேவேளையில் உத்தியோக காங்கிரஸ்கட்சியின் 5சிரேஷ்ட தலைவர்கள் இம்மாதம் 6ம் திகதி பம்பாயில் கூடிகாங்கிரஸ் கட்சிகளின் இணைப்பு குறித்து ஆராய்வர். (இ)

லஞ்சவழக்கில்

## நீதிமன்ற ஊழியருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

[கொழும்பு]

ஐந்து ரூபா லஞ்சம் வாங்கியதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நீதிமன்ற ஊழியரான எதிரிக்கு 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 12 மாதம் கடூழியச் சிறைத் தண்டனையும், 100 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி திரு. கே. விக்னராசா முன்னிலையில் 5 நாட்கள் நடைபெற்றது.

இவ்வழக்கில் 1976 நவம்பர் 1ந் தேதி குருநாகல் நீதவான் நீதிமன்ற ஊழியரான எச். எம். கிரிபண்டா என்பவர் திசநாயக்கா என்பவரிடம் வழக்கொன்றின் இலக்கத்தைத் தெரிவிப்பதற்காக 5 ரூபா லஞ்சம் வாங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்] ஆஜரானார். அரச தரப்பில் சட்டத்தரணி எம். எம்; சுபைர் ஆஜரானார். [க-அ]

## பங்களாதேஷ் ஜனாதிபதி தேர்தல்

டாக்கா, ஜூன். 1

பங்களாதேஷில் எதிர்வரும் 3ம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறுகிறது. (இ)

திருவிழாவுக்குச் செல்ல

## பணம் இல்லாததால் இளைஞன் எடுத்த முடிவு

(பண்டத்தரிப்பு)

கோவில் திருவிழாவுக்குப் போவதற்குப் பணம் தருமாறு தமது பேரனிடம் கேட்டாராம் இளைஞர் ஒருவர். பணம் எதுவும் இப்போது தம்மிடம் இல்லை என்று பேரன் கூறியதை யடுத்துக்கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார் இளைஞர். இச்சம்பவம் மாகியப்பிட்டியில் நடைபெற்றது. மாகியப்பிட்டியைச் சேர்ந்த சிவசம்பு யோகேஸ்வரன் என்ற 19 வயது இளைஞரே இவ்வாறு தற்கொலைசெய்து கொண்டவராவார். இவரதுமரணவிசாரணையை மல்லாகம் பகுதி திடீர்மரணவிசாரணை அதிகாரி சட்டத்தரணி எஸ். புண்ணியமூர்த்தி நடாத்தினார்.

காலம் சென்றவரின் பேரனுகிய தாமு ஜெயபதிப்பிள்ளை என்பவர் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது: "காலம் சென்றவர் தமது பெற்றோரைவிட்டுப்பிரிந்து என்னுடன் வசித்து வந்தார். சம்பவதினம் எமது ஊரிலுள்ள மாரியம்மன் கோவிலுக்குத் திருவிழா பார்க்கப்போவதற்கு ஆயத்தமாக வந்து என்னிடம் காசு தருமாறு கேட்டார். அப்போது காசு எதுவும் இல்லாதபடியால் "உனக்கு தெந்தக் காசுதர என்னிடம் இல்லை" என்று சொன்னேன். பின்னர் நான் வேலைக்குப் போய்விட்டேன். அவர் கிருமிநாசினி குடித்துவிட்டதாக அறிந்து ஓடிவந்து பார்த்தபோது இறந்துகிடக்கக்காணப் பட்டார்" கிருமிநாசினிப் போத்தலும் மரண விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்டது.

காலமானவரின் தந்தை சிவசம்பு, தாயார் ஜெயலட்சுமி ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

தற்கொலை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் எஸ். கதிர்காமநாதன் சாட்சிகளை ஆஜர் செய்தார். (க)

# உலகத் தமிழனுக்காக குரல் கொடுப்பது தி.மு.க.வே

## பம்பாயில் கருணாநிதி

பம்பாய், ஜூன். 1

என்னை தமிழக அரசு கைது செய்து சிறையில் வைத்தது என்ற செய்தி கிடைத்ததும், இலங்கையில் வாழுகின்ற தமிழர்களும், லண்டனில் வாழுகின்ற தமிழர்களும் என்னை விடுதலை செய்யக்கோரி மாபெரும் அணியை நடத்தினார்கள். தமிழன் கடல் கடந்து வாழ்ந்தாலும், அவனிடத்தில் கருத்து வேறுபாடு இருந்தாலும் கூட, "தாறுமாவிட்டாலும் தன் தலையாடும்" என்பதுபோல் ஒரு தமிழனுக்கு இன்னலென்றால் ஏனையதமிழர்கள் பொங்கி எழுவார்கள் என்பது இச்சம்பவங்களினால் உணரக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு பம்பாயில் நடைபெற்ற தி.மு.க. கொடியேற்றுவிழாவில் கலந்துகொண்டு பேசிய கலைஞர் மு. கருணாநிதி குறிப்பிட்டார்.

பம்பாய் சென்ற கலைஞருக்கு பம்பாயில் வாழும் தமிழர்கள் பெருவரவேற்பளித்துக் கௌரவித்தனர். பம்பாயில் பல தி. மு. க. கிளைகளை திரு. கருணாநிதி அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

திரு. கருணாநிதி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"உலகில் எந்தப் பகுதியில் தமிழர்களுக்கு தொல்லைகள் நேர்ந்தாலும் அவர்களுக்காக குரல் கொடுப்பது கழகம். உலக வரலாறுகாணாத சோதனைகளையெல்லாம் தவிடுபொடியாக்கி குன்றின் மேலிட்ட தீபமாய் அணையா ஒளிவிளக்காய் தி.மு. கழகம் இன்று உள்ளது.

குறிப்பாக இலங்கைத்தமிழர்களுக்கு இன்னல்நேருகின்ற போது, அன்று இருந்தகாலத்திலும் சரி, இன்றும் சரி குரல் கொடுப்பது தி. மு. கழகம் தான் இதேபோல் பம்பாயில் வாழ்கின்ற தமிழர்களுக்கும் இன்னல்என்றால் குரல்கொடுப்பது தி. மு. க. தான். (செ-இ)

## புனித கபிலவஸ்து வவனியா வருகிறது

[வவனியா]

புத்தரின் புனித கபிலவஸ்து ஜூன் மாதம் 16-ம் திகதி வவனியாவிற்குக் கொண்டுவரப்படவிருக்கிறது. இவ்வைபவத்தையொட்டி, வவனியாத் தொகுதியிலுள்ள சிங்களமக்கள் வாழும் கிராமங்களுக்கு அன்றையதினம் விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக வவனியா டிப்போ அத்தியட்சகர் திரு. வீ. சிறிஸ்கந்தராஜா தெரிவித்தார். (உ)

## 'பாஸ்போட் பத்திரங்கள்

(யாழ்ப்பாணம்)

பாஸ்போட் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரங்களும் அவசரகால வெளிநாட்டுப்பயண விண்ணப்ப பத்திரங்களும் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் வழங்கப்படுகின்றன;

## பிரான்சிஸ் லஞ்சக் குற்றச்சாட்டு:

# "பொலிசாருக்கு அறிவுரை வழங்குக"

### நீதிபதியிடம் சட்டத்தரணி விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

சட்டத்தரணி எஸ். எஸ். பிரான்சிஸ் மீதான லஞ்சக்குற்றச்சாட்டிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார்.

யாழ் நீதவான் திரு. வே. வி. நவரத்தினம் அவரை லஞ்சக் குற்றச்சாட்டிலிருந்து விடுவிப்பதாக அறிவித்தார்.

இதற்கு முன், சட்டத்தரணி பிரான்சிஸ் சார்பில் பத்துக்கு மேற்பட்ட சட்டத்தரணிகள் ஆஜரான சமயம் சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் உரையாற்றுகையில் பொலிசாருக்குத் தகுந்த அறிவுரை வழங்குமாறு நீதிபதியிடம் கேட்டுக்கொண்டார். சட்டத்தரணி விஸ்வநாதன் கூறியதாவது:

"கடந்த வருடம் ஜூன் மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தினம் என்பவர் ... தத்தெடுத்துக்கொண்ட அவரது சகோதரன் அருந்தவநாயகம் ஒரு அடைவு வைத்திருந்தாரென்றும், அதனை எடுக்க சத்தியக்கடுதாசி முடித்துத் தருமாறும் சட்டத்தரணி பிரான்சிஸ் இடம் கேட்டார்.

சட்டத்தரணி என்ற ரீதியில் சத்தியக்கடுதாசி முடித்துத்தர 50 ரூபா தரவேண்டுமென்றும் 21ம் திகதி கிராம சேவகரின் அத்தாட்சிக் கடிதத்துடன் வரும்படியும் அவரிடம் கூறப்பட்டது. 21ம் திகதி ஞாயிற்றுதினம் 50 ரூபாவுடன் வந்தபோது வேறு ஆட்களும் அங்கிருந்தனர். சட்டத்தரணி பிரான்சிஸ் 50 ரூபாவை அவரிடம் பெற்றுக்கொண்டு அன்று விடுமுறை தினமாக இருப்பதால் வேறு ஒருநாள் வரும்படி கூறினார். அவர் சென்றதும் அங்கு நின்ற ஒருவர் தான் லஞ்ச இலாகா உத்தியோகத்தர் எனக்கூறி அவரைக் கைதுசெய்து பொலிஸில் ஒப்படைத்தார். பொலிஸ் நிலையத்தில் சட்டத்தரணி பிரான்சிஸ் 60 ரூபா தமது 'பீஸாக' வாங்கியதாகக் கூறியும் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்செய்து 10 நாட்கள் றிமாண்டில் வைத்தனர். பொலிஸார் கூறுவதுபோல் அவர் இறப்புச்சாட்சிப்பத்திரத்திற்காக 50 ரூபா பெறவில்லை. சத்தியக்கடுதாசி முடித்துக்கொடுக்கவே பெற்றார். இறப்புப்பத்திரத்தைப் பதிவாளரிடமே பெறவேண்டுமன்றி ஓர் சட்டத்தரணியிடமல்ல. அவர் ஒரு சாதாரண பிரஜையல்ல. ஒரு சட்டத்தரணி, உத்தியோகப்பற்றற்ற நீதிபதி. 9 வருடம் சட்டத்துறையில் கடமையாற்றும் ஒருவர். மரணவிசாரணை அதிகாரியாகவும், சமாதான நீதிபதியாகவும் பட்டம் வழங்கி அரசு அவரைக் கௌரவித்துள்ளது. அவர் மீதுள்ள புகாரை பொறுப்பாகவிசாரணைசெய்து பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்திருக்க வேண்டும். அவர் மீது கொண்ட பொருமையினால் இளம் வயதில் அவர் முன்னணியில் நிற்பதால் சில சக்திகளின் சூழ்ச்சி காரணமாக அவரை இதில் சிக்க வைத்துள்ளனர்.

"10 நாள் றிமாண்டிலிருந்த பின் அவர் பிணையில் விடப்பட்டார். இந்த அவமானம், அவருக்குமட்டுமன்றி அவரது குடும்பத்திற்கும் பெரும் மனவேதனையையும், எங்கள் சங்கத்திற்குப் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இவர் மீதுள்ள குற்றச் சாட்டில் அணுவளவும் உண்மையில்லை. இதுஒரு பொய்க் குற்றச்சாட்டு. உடல் நோயுற்றால் தாங்கலாம். ஆனால் மனவேதனையைத் தாங்க முடியாது.

'மனித அடிப்படை உரிமை பறிக்கப்பட்ட நிலையில், இத்தப் பொலிஸாருக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்ட இந்நிலையில், அவர்களைக் கவனமாக நடக்குமாறு அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.' (ச-க)

## சிறையிலிருந்து யுவதி பாய்ச்சல்

(கொழும்பு)

சிறைச்சாலையிலிருந்துபேரிய தம்பி சரோஜா என்ற பதினாறு வயது யுவதி பாதுகாவலர்க்கு டிமிக்கி கொடுத்துத்தப்பி ஓடி விட்டாராம். (உ)

## மாதகலில் புனித கதிர்ப்பாத்திரம்

(சுழிபுரம்)

உலக திருச்சபைக் கன்னியரின் புனித கதிர்ப்பாத்திரம், போர்ட்டோ நாட்டிலிருந்து மாதகல் இராமத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. 156 வருட காலப்பழமை வாய்ந்த இக்கதிர்ப்பாத்திரம், புதுமைவாய்ந்தது. 1822-ம் ஆண்டு போட்டோ நாட்டிலுள்ள லொரேற்றோ தேவாலயத்தில் தேவநற்கருணை வழங்கப்பட்ட கதிர்ப்பாத்திரத்தில், இயேசுநாதர் முப்பது வயது கொண்ட இளைஞர் உருவில் தோன்றி அற்புதம் நிகழ்த்தினார்.

இவ்வற்புதம் நிகழ்ந்த புனித கதிர்ப்பாத்திரமே வடபகுதிக்கு கொண்டுவரப்பட்டு வடமாகாணத் திருக்குடும்பக் கன்னியர் மடத்தலைவியிடம் கையளிக்கப்பட்டது. இக்கதிர்ப்பாத்திரம், திருக்குடும்ப கன்னியர் சேவைசெய்யும் ஸ்தலங்களுக்கு வழிபாட்டிற்காக எடுத்துச்செல்லப்பட்டு வருகின்றது. இல்லாலையில் இருந்து கொண்டுவரப்பட்ட இக்கதிர்ப்பாத்திரத்தை மாதகல் சென் தோமஸ் கன்னியர் தலைவி சகோதரி நிசெற்று கையேற்றுக்கொண்டார். பங்குக்கட்டளைக்குருவானவர் வண. பொன்னையா, பூசை வழிபாடு நடத்தினார், மாதகலிலுள்ள கத்தோலிக்க மக்கள் பெரும் திரளாக வந்து புனித கதிர்ப்பாத்திரத்தை தரிசித்தனர்.

## அக்கு பங்சர் சிகிச்சை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக சீன வைத்திய முறையிலான அக்கு பங்சர் சிகிச்சை இன்று ஆரம்பிக்கப்படுகின்றது.

யாழ். ஆனைப்பந்தியிலுள்ள தனியார் வைத்திய சாலையில் இவ்வைத்திய சேவையை பிரபல வைத்திய நிபுணரான டாக்டர் ரதி. சிற்றம்பலம் எம்: ஆர். சி.பி. (யு. கே) நடத்துகின்றார். (கா)

## சுழிபுரம் கி. ச. நடவடிக்கை

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமசபைப்பகுதியிலுள்ள துவிச்சக்கர வண்டி இலக்கத் தகடுகள் விற்பனையால் மூன்று தினங்களில் மட்டும் சுமார் 1350 ரூபா தொகையை சபை ஊழியர் சேர்த்துள்ளனர்.

கிராம சபை அலுவலகத்திற்கு முன்பாகவுள்ள வீதியில் நின்றே வாகனங்களைப் பரிசோதித்துப் பணத்தை திரட்டிக் கொண்டனர்.

சபைப் பிரதேசத்தில் சுமார் பத்தாயிரம் துவிச்சக்கர வண்டிகளுக்கு மேல் இருப்பதும் பல இலக்கத்தகடுகள் எடுக்காமல் இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாம். (உ)

## பாலர் நலன் கருதி...

(சாவகச்சேரி)

நெடுந்தீவில் புனித அந்தோனியார் பாலர் பாடசாலையை உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல் திறந்து வைத்தார். நெடுந்தீவு குருநகர் மக்களால் அமைக்கப்பட்ட இப்பாடசாலையின் திறப்புவிழாவுக்கு வண. கட்டளைக்குரவர் றெஜி இராஜேஸ்வரன் தலைமைதாங்கினார். (உ)

## விசேடகுழு

(காரைநகர்)

வட்டு- பெரியமுனாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியை சீர்படுத்தி அதனை புதிய பொலிவுடன் இயங்க வைக்கும் பொருட்டு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். தர்மபாலன் யாழ். கூட்டுறவுத் தலைமை காரியாலய கூட்டுறவுப்பரிசோதகர் திரு. எஸ். சிறிஸ் தோத்திரம் திரு. எஸ். கணேசன் ஆகியோர் அக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

## 18 ஊழியர் வேலை இழப்பர்

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் பதினெட்டு ஊழியர்கள் அடுத்தமாதம் முதல் பதவி இழக்கவுள்ளனர்.

1.2-76க்குப்பின் நியமனம் பெற்ற இவ்வூழியர்களை வேலை நீக்கம் செய்வதென்று இயக்குநர்சபைமுடிவு செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து பிரஸ்தாப ஊழியர்கள் வேலை நீக்க முடிவை ஆட்சேபித்துக் கூட்டுறவு அமைச்சரிடம் முறையிட்டுள்ளனர்.

1-2-76க்கு பின் நியமனம் செய்யப்பட்டு ஆகம் பிந்திய நியமனம் பெற்ற ஒரு பெண் லிகிதரும் விற்பனையாளர் ஒருவரும் நிரந்தர கடிதம் பெற்று தொடர்ந்து பணிபுரிகின்றபோது தம்மை வேலை நீக்கம் செய்வது அநீதியானது என்றும் அமைஜரில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## புதியகட்டடம்

(சாவகச்சேரி)

வேலணை மத்திய கல்லூரிக்கும் புதிய கட்டடமொன்று விரைவில் அமைக்கப்படவிருக்கிறது.

தீவுப்பகுதி எம்: பி. பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் இதற்கென எண்பதினாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். (உ)

## இறம்பைக்குளம் மகளிர் வெற்றி

(வவுனியா)

வவுனியா தமிழ் மகாவித்தியாலய மாணவிகளுக்கும் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலய மாணவிகளுக்கும் இடையில் நடைபெற்றவலைப்பந்தாட்டப் போட்டியில் இருபிரிவுகளிலும் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரிமாணவிகள் வெற்றியீட்டினர். (உ)

## மணவாளக்கோலவிழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பங்குவந்தசாமி கோவில் மணவாளக்கோலவிழா இம்மாதம் 6-ம் திகதி நடைபெறுகிறது.

பகல் விசேட அபிஷேக ஆராதனைகளும், சுவாமி வீதிவலம் வருதலும் இடம்பெறும். மேளக்கச்சேரியுடன் வில்லிசையும் நடைபெறும். (இ)

## மருந்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மருந்தை தவறுதலாக மாற்றிக் கொடுத்ததினால் மூன்று குழந்தைகள் மரணமாகின.

இதனால் ஒரு பயிற்சி தாதியும் மற்றும் இரு சிரேஷ்ட தாதிகளும் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

# "தமிழ் பேசும் மக்களுக்கு சகலதுறையிலும் சமவாய்ப்பு"

### ஜனாதிபதி உறுதி மொழி

(கொழும்பு)

"இலங்கையின் ஒவ்வொரு பிரஜையும் ஒரே மாதிரியாகக் கணிக்கப்படுவார்கள். ஒவ்வொரு பிரஜையினதும் முன்னேற்றத்திற்கும் சம வாய்ப்பு அளிக்கப்படும். திறமைக்கு மதிப்பளிக்கப்படும். இதுபான்மையினரைப் பொறுத்தமட்டில் தமிழ்பேசும் மக்களுக்குச் சகல துறைகளிலும் சம சந்தர்ப்பம் அளிக்கப்படும். பாராளுமன்றஆட்சிமுறையை நிலைக்கச் செய்யவும், ஜனாதிபதியின் ஆட்கள் என்ற ஒரு கூட்டம் உருவாகாமல் பார்த்துக்கொள்வதும், அரசியல் பழிவாங்கல் நடைபெறாமற் செய்வதும் எமது முக்கிய நோக்கமாகும்"

இவ்வாறு ஜனாதிபதியும், பல்கலைக்கழக வேந்தருமான ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்று முன்தினம் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைப் பட்டமளிப்புவிழாவில் பட்டமளிப்பு உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தமதுரையில் மேலும் கூறியதாவது:

"ஒவ்வொரு நாடும் தனது மனித சக்தியையும், மூலதனங்களையும் பயன்படுத்தக் கூடிய அபிவிருத்தித் திட்டங்களைக்கொண்டு, தேசிய செல்வத்தைப் பெருக்கி, தனது பிரஜைகளிடையே, அது சமமாகப் பங்கிடக்கூடிய நிலையை உருவாக்கவேண்டும். இன்று நமது நாட்டில் பத்து லட்சத்திற்கும் அதிகமானோர் வேலையின்றி இருக்கின்றனர். இத்தொகை ஆண்டு தோறும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது

"நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் ஒன்றரை லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளோம். நடப்பு ஆண்டில் வேலைவாய்ப்பு வங்கி மூலமாக ஒரு லட்சத்து 68 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க உள்ளோம்"

இளைஞர்கள் தங்களின் பொறுப்புக்களையும் கடமைகளையும் உணர்ந்து நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் தங்களை ஈடுபடுத்த முன்வர வேண்டும். இந்த நாட்டில், சகலபிரஜைகளையும் சமத்துவமாக நடத்துகின்றோம். சுருக்கமாகச் சொல்வதானால் இந்த நாட்டில் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் நாம் நிலைநிறுத்தியிருக்கின்றோம். சட்டத்தை மதித்து நடப்பவர்கள் இங்கு சுதந்திரமாக வாழலாம். இது எல்லாநாட்டிற்கும் பொருந்தக்கூடியதே" என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தமது பட்டமளிப்பு உரையில் குறிப்பிட்டார்.


## தேவை

புத்தக விற்பனையில் அனுபவமுள்ளவர் உடன் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஆங்கில அறிவும், நல்ல கையெழுத்தும் முக்கியம் 2-6-78 வெள்ளிக்கிழமை (இன்று) பிற்பகல் 4-00 மணிக்கு நேரில் வரவும்.

### தம்பித்துரை அன் சன்ஸ்,

226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

9458


## யாழ். மூற்றவெளியில் இரவில் நடமாடிய

# 6 இளம்பெண்களுக்கு 9-ந் திகதிவரை றிமாண்ட்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முற்றவெளியில் இரவு நேரத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாக பொலிஸார் ஆறு இளம் பெண்களை கைது செய்தனர்.

யாழ் நீதவான் கே. வி. நவரத்தினம் முன்னிலையில், இவர்கள் ஆஜர் செய்யப்பட்டபோது, நீதவான் இம்மாதம் 9-ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

யாழ். முனிஸ்வரன் கோவிலுக்கு சமீபத்திலும், முற்றவெளிப்பகுதியிலும், இரவில் இளம் பெண்களின் நடமாட்டம் அதிகரித்து வருவதாகவும், இதனால் கோவிலுக்கு வழிபடச் செல்வோருக்கு அசௌகரியம் ஏற்படுவதாகவும், பொலிஸாருக்கு கிடைத்த புகாரைத் தொடர்ந்து பொலிஸார் அப்பகுதியைக் கண்காணித்து வந்தனர்.

சிறு குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் திருச்சிற்றம்பலம், சார்ஜன் எம். பேரின்பநாயகம் ஆகியோருடன் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாக கூறப்படும் இப்பெண்களைக் கைது செய்தனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ... யாழ்ப்பாணம் ... வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanadu P. O. Box 49, Jaffna. Telegram 'Eelanadu' Telephone 189, Registered as a Newspaper in Sri Lanka.